# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

THE HINDU DATED 22.05.2025

# கல்லூரிகளுக்கு இடையிலான கபடி போட்டி
# புதுச்சேரி பல்கலை, பாரதிதாசன் கல்லூரி சாம்பியன்

**புதுச்சேரி, மே 22–**

கல்லூரிகளுக்கு இடையிலான கபடி போட்டியில் பெண்கள் பிரிவில் பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரியும், ஆண்கள் பிரிவில் புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரியும் சாம்பியன்ஷிப்பை வென்றன.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் முதன் முறையாக, புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரி, கல்லூரிகளுக்கு இடையேயான முதல்வர் கபடி போட்டி நடந்தது.

இப்போட்டியில் பல்வேறு கல்லூரி அணிகள் ஆர்வமாக பங்கேற்றன.

பரிசளிப்பு விழா சமுதாய கல்லூரியில் நடந்தது. கல்லூரியின் முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் வரவேற்றார். விளையாட்டு நிகழ்வுகளின் அமைப்பாளர் ஜெகதீஸ்வரி, கல்லூரியின் விளையாட்டு சாதனைகளை பட்டியலிட்டார். புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் பாணிதி பிரகாஷ் பாபு, கபடி போட்டியில் வெற்றிப்பெற்ற கல்லூரி அணிகளுக்கு பரிசு கோப்பைகள் மற்றும் பதக்கங்கள் வழங்கி பாராட்டினார்.

எம்.எல்.ஏ.,க்கள் கல்யாணசுந்தரம், வைத்தியநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

கபடி போட்டியில் பெண்கள் பிரிவில் பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரியும், ஆண்கள் பிரிவில் புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரியும் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றது குறிப்பிடத்தக்கது.



■ புதுச்சேரி பல்கலைக்கழகம் சார்பில் கல்லூரிகளுக்கு இடையிலான கபடி போட்டியில் வென்ற அணிகளுக்கு எம்.எல்.ஏ.,க்கள் கல்யாணசுந்தரம், வைத்தியநாதன், துணைவேந்தர் பாணிதி பிரகாஷ் பாபு பரிசு வழங்கினர். அருகில் கல்லூரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAKARAN DATED 22.05.2025

பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில்

# விளையாட்டு போட்டி பரிசளிப்பு விழா



புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரி சார்பில் நடந்த கபடி போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு எம்எல்ஏக்கள் கல்யாணசுந்தரம், வைத்தியநாதன், துணைவேந்தர் பிரகாஷ் பாபு ஆகியோர் பரிசு கோப்பை வழங்கினர்.

புதுச்சேரி, மே 22: புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் முதன் முறையாக, புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரி சார்பில் கல்லூரிகளுக்கு இடையேயான முதலமைச்சர் கபடி போட்டியை சமீபத்தில் நடத்தியது. 20க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகள் பங்கேற்றன. மேலும், சமுதாய கல்லூரியில் விளையாட்டு தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக தடகளம் உட்பட பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து, விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் விழா சமுதாய கல்லூரியில் நடந்தது. கல்லூரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் வரவேற்றார். விளையாட்டு நிகழ்வுகளின் அமைப்பாளர் ஜெகதீஸ்வரி, செயல்பாடுகள் குறித்து விளக்கினார். சிறப்பு விருந்தினர்களாக எம்எல்ஏக்கள் கல்யாணசுந்தரம், வைத்தியநாதன், பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு ஆகியோர் கலந்து கொண்டு கபடி, தடகளம் உள்ளிட்ட அனைத்து விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பைகள் மற்றும் பதக்கங்களை வழங்கினர். கபடி போட்டியில் பெண்கள் பிரிவில் பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரியும், ஆண்கள் பிரிவில் புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரியும் சாம்பியன்ஷிப் வென்றன.

மேலும், புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் 2025-26ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கைக்கான *www.pucc.edu.in* என்ற இணையதளத்தில் வைத்தியநாதன் எம்எல்ஏ தொடங்கி வைத்தார். இதேபோல், கல்லூரியின் முன்னாள் மாணவர் போர்ட்டலை துணைவேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு திறந்து வைத்தார். கல்லூரி நூலகத்தின் SOUL3.0 மென்பொருளின் மேம்பட்ட பதிப்பும் திறக்கப்பட்டது. முன்னதாக பல்கலைக்கழக மனிதநேய பள்ளியின் புல முதன்மையர் சுல்தானா வாழ்த்தி பேசினார். உடற்கல்வி மற்றும் யோகா துறையின் தலைவர் முருகேசன் நன்றி கூறினார்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

MAALAI MALARDATED 22.05.2025



கல்லூரிகளுக்கு இடையிலான கபடி போட்டி

# பல்கலைக்கழக சமுதாய கல்லூரிக்கு கோப்பை

## பெண்கள் பிரிவில் பாரதிதாசன் கல்லூரி அணி சாம்பியன்

புதுச்சேரி, மே.22—

புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் கல்லூரிகளுக்கு இடை யிலான கபடி போட்டி நடந்தது.

போட்டியில் பல்வேறு கல்லூரி அணிகள பங்கேற்றன. வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசளிப்பு விழா சமுதாய கல்லூரியில் நடந்தது. கல்லூரி முதல்வர் லலிதாராமகிருஷ்ணன் வரவேற்றார். விளையாட்டு நிகழ்வு அமைப்பாளர் ஜெக

சாதனைகளை பட்டியலிட்டார். பல்கலைக்கழக துணை வேந்தர் பிரகாஷ்பாபு போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரி களுக்கு பரிசு கோப்பை, பதக்கம் வழங்கி பாராட்டினார். எம்.எல்.ஏ. க்கள் கல்யாணசுந்தரம், வைத்தியநாதன் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். கபடி போட்டியில் பெண்கள் பிரிவில் பாரதிதாசன் கல்லூரியும், ஆண்கள் பிரிவில் பல்கலைக்கழக சமுதாய கல்லூரியும் சாம்பியன்ஷிப்

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

THE HINDU DATED 22.05.2025



# Pondy univ to offer free UPSC coaching for disabled

Puducherry: Pondicherry University is launching a free 12-month UPSC coaching programme for Persons with Disabilities (PwDs), funded by the Ministry of Social Justice & Empowerment. Starting May 29, it offers coaching, accommodation for outstation candidates, a monthly stipend, and access to accessible resources. Eligible PwDs can apply by May 25 via https://forms.gle/7GrACguPiRVrWHfY8.